(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 4(5).]**

# பாராளுமன்றத்தின்
# 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2026 ஆகஸ்ட் 21, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2026 செப்தெம்பர் 08, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

அரசியலமைப்புக்கான இருபத்திரெண்டாம் திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

ஊழல் எதிர்ப்பு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 202 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 மே 19 ஆம் திகதிய 2489/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.08.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 141, 143, 144, 157அ, 168 மற்றும் 190 ஆம் பிரிவுகளின் கீழ் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2026 யூன் 17 ஆம் திகதிய 2493/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.08.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் செய்யப்படுகின்ற பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் ஊதியங்கள், மேற்படி சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கமைய பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுவதுடன், திரட்டு நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டுமென்பதனாலும்;

ஆணைக்குழுவிற்கு நியமனம் செய்யப்படுகின்ற உறுப்பினர்களில் தவிசாளர் உட்பட குறைந்தபட்சம் மூன்று (03) பேரை முழுநேர உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்கு மேற்படி சட்டத்தின் 5(5) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு சாட்டுதல் செய்யப்படுகின்ற செயற்பணிகளின் முக்கியத்துவத்தையும் கவனத்திற் கொண்டு, பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு பின்வருமாறு ஊதியங்கள் மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு 2026.08.10 மற்றும் 26/1522/819/010-I கொண்ட அமைச்சரவைத் தீர்மானம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமையினாலும்:—

(i) தவிசாளருக்கு மாதாந்தம் ரூபா 135,000.00 ஆன மற்றும் உறுப்பினர்களுக்கு மாதாந்தம் ரூபா 90,000.00 ஆன ஊதியங்களைச் செலுத்துதல்;

(ii) தவிசாளருக்கு மாதாந்தம் ரூபா 6,000.00 ஆன மற்றும் உறுப்பினர்களுக்கு ரூபா 4,250.00 ஆன தொடர்பாடல் கொடுப்பனவையும் செலுத்துதல்; மற்றும்

(iii) மாதாந்த எரிபொருள் மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவை பின்வருமாறு செலுத்தல்:

| | **எரிபொருள் கொடுப்பனவு** | **போக்குவரத்துக் கொடுப்பனவு** * |
|---|---|---|
| தவிசாளர் | லீற்றர் 220 | ரூ. 50,000.00 |
| ஏனைய உறுப்பினர்கள் | - | ரூ. 25,000.00 |

* தவிசாளருக்கு போக்குவரத்துக் கொடுப்பனவு உரித்தாவது அரசினால் சாரதியுடனான உத்தியோகபூர்வ வாகனம் வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம்.

அதன் பிரகாரம், 2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் 13 ஆம் பிரிவுக்கமைய, பெண்கள் பற்றிய தேசிய ஆணைக்குழுவின் தவிசாளருக்கு மற்றும் உறுப்பினர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் அரச திரட்டு நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

*** அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, செப்தெம்பர் 08, செவ்வாய்க்கிழமை)**

2256/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025.04.05ஆந் திகதி இந்தியாவும், இலங்கையும் டிஜிட்டல் மாற்றம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி ஒப்பந்தத்தின் தரப்பினர் யாவரென்பதையும்;

(iii) மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம், ஒவ்வொரு தரப்பினருக்கும் உரிய பொறுப்புகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தற்போது நிலவும் முன்னேற்றம் யாதென்பதையும்;

(v) மேற்படி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்தால் இதுவரை முதலீடு செய்யப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(vi) அவ்வொப்பந்தத்தின் பிரகாரம், நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, செப்தெம்பர் 09, புதன்கிழமை)**

2257/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025.04.05ஆந் திகதி இலங்கைக்கும், இந்தியாவிற்கும் இடையில் உயர் மின்னழுத்த நேர் மின்னோட்டப் பரிமாற்றம் மூலம் மின்சாரத்தை இறக்குமதி செய்வதற்கும், ஏற்றுமதி செய்வதற்குமான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி ஒப்பந்தத்தின் தரப்பினர் யாவரென்பதையும்;

(iii) மேற்படி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இதுவரையில் அடைந்துள்ள முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக, இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களினாலோ இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினம் எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி ஒப்பந்தத்திற்கமைவாகச் செயற்படுவதன் மூலம் இலங்கைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் தடைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, செப்தெம்பர் 10, வியாழக்கிழமை)**

2258/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் 2025.04.05ஆந் திகதி கையொப்பமிடப்பட்ட பாதுகாப்பு ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கமைவாக எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி இணக்கப்பாடுகளுள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு, நிறைவுசெய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) ஒப்பந்தத்தின் பிரகாரம், எட்டப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம், இந்தியாவுடன் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கமைய அவற்றை செயற்படுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 செப்தெம்பர் 11, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 132/2026

கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்,— 1983 ‘கறுப்பு ஜூலை’ யின் போது நிகழ்ந்த இன வன்முறைகள் குறித்த உண்மையைக் கண்டறிவதற்கும், அதனால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்கும், மேலும் இதுபோன்ற இன வன்முறைகள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்குமான விதப்புரைகளைச் செய்வதற்காக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றை நியமித்தல்,— 1983 ‘கறுப்பு ஜூலை’ மற்றும் வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளும், இன மோதல்களும், வன்முறைகளும் நாட்டின் தேசிய ஒருமைப்பாடு, சமூகக் கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் மீது மிக மோசமான வடுக்களை ஏற்படுத்தி உள்ளதாலும், மேற்படி மோதல்கள் மற்றும் வன்முறைகளினால் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு, பல்லாயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டதாலும், வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட பெறுமதியான சொத்துக்கள் தீயிட்டு முழுமையாக அழிக்கப்பட்டதாலும், இச்சம்பவம் இடம்பெற்று 40 ஆண்டுகளுக்கு மேல் கடந்துள்ள நிலையிலும் இந்த மோதல்களையும் வன்முறைச் சம்பவங்களையும் வழிநடத்தியவர்கள் அடையாளங்காணப்படவில்லை என்பதாலும், இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சொத்து சேதங்கள் குறித்து பரந்துபட்டதும் சுயாதீனமானதுமான விசாரணை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதாலும், இவ்வாறான இன மோதல்களும் வன்முறைகளும் இனியும் இந்த நாட்டில் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துதல் மற்றும் நாட்டின் சகல இனக்குழுமங்களுக்குமிடையே நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப வேண்டியது இன்றியமையாததென்பதாலும், மேற்படி வன்முறைகள் குறித்த உண்மையை கண்டறிவதற்கும், அதனால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்கும், மேலும் இதுபோன்ற இன வன்முறைகள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்குமான விதப்புரைகளைச் செய்வதற்காக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இந்த பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2026, செப்தெம்பர் 11, வெள்ளிக்கிழமை)**

2259/2026

கௌரவ அஜித் பி. பெரேரா,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2020.01.01ஆந் திகதி தொடக்கம் 2026.03.31ஆந் திகதி வரையான காலப்பகுதியில் —

(i) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் சட்டத்தரணிகளுக்கான கட்டணமாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் ஒரு தரப்பினராக இருந்த வழக்குகளின் இலக்கங்கள், சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் மற்றும் ஒவ்வொரு வழக்கிற்காகவும் சட்டத்தரணிகளுக்கு செலுத்திய கட்டணம் ஆகிய விபரங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) வழக்கு நடவடிக்கைகளுடன் தொடர்பற்ற சட்டரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சட்டத்தரணிகளுக்கு செலுத்தப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) இலங்கை கிரிக்கெட் நிறுவனம் எச்சட்டத்தரணிகளிடமிருந்து வழக்குகள் மற்றும் ஏனைய சட்டரீதியான ஆலோசனைகள் தொடர்பான சேவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளது என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு சட்டத்தரணிக்கும் செலுத்தப்பட்ட கட்டணம் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்துடன் தொடர்புடைய சட்டரீதியான நடவடிக்கை களுக்காக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய செலவினங்களைக் குறைத்துக் கொள்வதற்காக தற்போதைய நிருவாகத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 செப்தெம்பர் 22, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

325/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வைத்தியசாலைகளின் நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவைப்படும் மிக முக்கியமான 15 பொருட்கள் மற்றும் அத்தியாவசியமானவை என இனங்காணப்பட்ட 354 பொருட்கள் தொடர்பான தற்போதைய கையிருப்பு நிலைமை யாதென்பதையும்;

(ii) மேற்படி பொருட்களில் முற்றுமுழுதாகக் கையிருப்புத் தீர்ந்துள்ள பொருட்கள் மற்றும் 02 மாதங்களுக்கு மாத்திரம் போதுமான கையிருப்புள்ள பொருட்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) விநியோகஸ்தர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய 60, 90, 120 மற்றும் 150 நாட்களைக் கடந்துள்ள நிலுவைக் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(iv) 60 நாட்களைக் கடந்துள்ள நிலுவைக் கொடுப்பனவுகள் அவ்வாறு தாமதமடைவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்சாரம், நீர், உணவு மற்றும் ஆடைச் சலவைக்கான கொடுப்பனவுகளின் தற்போதைய நிலைமைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) உள்நாட்டு உற்பத்தி விநியோகஸ்தர்களுக்கு செலுத்த வேண்டிய, 60 நாட்களைக் கடந்து தாமதமடைந்துள்ள கொடுப்பனவுகளைத் செலுத்தித் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

474/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலுசக்தி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கைகளை, ஒவ்வொரு மாவட்ட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்கூறிய எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐ.ஓ.சி. பிஎல்சி மற்றும் ஏனைய நிறுவனங்களின் கீழ் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கைகளை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலைய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கைகளை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்கூறிய அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(vi) அத்தகைய அனுமதிப்பத்திரங்களை வழங்கியதன் மூலம் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈட்டியுள்ள வருமானம் யாதென்பதையும்;

(vii) எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்படும் அளவுகோல்கள் யாவை என்பதையும்;

(viii) எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குத் தரகுப்பணம் செலுத்துவதற்கான சட்டபூர்வமான அடிப்படை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

786/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது ஜா-எல டிப்போவிடம் உள்ள பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது;

(ii) குறித்த டிப்போவினால் தினசரி சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டிகளின் எண்ணிக்கை யாது;

(iii) டிப்போவில் தற்போது நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது;

(iv) ஜா-எல நகரிலிருந்து தூர இடங்களுக்கான சேவைகளை ஆரம்பிப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

885/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 'அளிப்புப் பத்திரம்' அல்லது 'காணி உரிமம்' இல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தின், கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அரசாங்க காணிகளில் ஆட்கள் குடியிருக்கின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அரசாங்க காணிகளிலிருந்து மேற்குறிப்பிட்ட ஆட்களை சட்டரீதியாக வெளியேற்றுவதற்கு 2017.01.01 தொடக்கம் 2025.03.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஏற்புடைய பிரதேச செயலாளர் அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்ந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) உரிய பிரதேச செயலாளரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்களில் மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளுக்கமைய அரசாங்க காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய விபரங்கள் யாவை என்பதையும்;

(vi) வழக்குத் தாக்கல் செய்யவேண்டி இருப்பினும் ஏற்புடைய பிரதேச செயலாளரினால் வழக்குத் தாக்கல் செய்யப்படாத ஆட்கள் இருக்கின்றார்களா என்பதையும்;

(vii) ஆமெனில், மேற்படி ஆட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் சம்ந்தப்பட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(viii) சிலருக்கு எதிராக மாத்திரம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமைக்கும், கூடுதலான ஆட்களுக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படாமைக்குமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

908/2025

கௌரவ முஜிபுர் ரஹுமான்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மன்றக் கல்லூரி நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரையில் மேற்படி நிறுவனத்திற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றளவில், மேற்படி நிறுவனமானது, அதன் ஆரம்ப நோக்கங்களிலிருந்து விலகி இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாறியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

945/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை 'கையுதிர்த்தலாகாது' என்பதாகக் குறிப்பிட்டு சனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஒருவரினால் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி கடிதம் கிடைக்கப் பெற்றதன் பின்னரும் காணிகள் கையுதிர்க்கப்பட்டுள்ளது என்பதை அறிவாரா;

(iii) ஆமெனில், அவ்வாறு கையுதிர்க்கப்பட்ட காணிகளின் அளவு யாது;

(iv) அவ்வாறு காணிகள் கையுதிர்க்கப்பட்டதற்கான காரணம் யாது;

(v) மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாவை;

(vi) ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளை முறையாக ஒழுங்குறுத்துதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1039/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலைகளுக்கு வழங்கும் பொருட்டு இலங்கைக்கு சூட்டிகைப் பலகைகள் (Smart board) இறக்குமதிச் செய்யப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) அவ்வாறு இறக்குமதிச் செய்யப்பட்ட சூட்டிகைப் பலகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இன்றளவில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்படி சூட்டிகைப் பலகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இந்த சூட்டிகைப் பலகைகளை துரிதமாக விநியோகிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1379/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது நாடு முழுவதிலும் நிலவும் ஆங்கில மொழி ஆசிரியர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தகவல் தொழில்நுட்பவியல், மனைப் பொருளியல் மற்றும் அழகியல் பாடங்களுக்கு நிலவும் ஆசிரியர் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக டிப்ளோமாதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், தற்போது ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள டிப்ளோமாதாரிகளின் எண்ணிக்கை, பாட வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும்போது அரசாங்க அங்கீகாரம் பெற்ற டிப்ளோமாக்களை வழங்கும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1916/2026

கௌரவ சுதந்த குமார நவரத்ன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில், ஆயுர்வேத திணைக்களத்திற்கு சொந்தமான மூலிகைத் தோட்டங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி மூலிகைத் தோட்டங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு மூலிகைத் தோட்டத்துக்கும் உரிய காணியின் விஸ்தீரணம் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி மூலிகைத் தோட்டங்களில் பணியிலீடுபட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(v) மேற்படி மூலிகைத் தோட்டங்களில் இருந்து கிடைக்கப்பெறும் வருடாந்த வருமானம் வெவ்வேறாக யாது;

(vi) மூலிகைத் தோட்டங்களுக்காக ஆண்டொன்றுக்கு செலவாகும் சராசரி செலவு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1927/2026

கௌரவ லால் பிரேமநாத்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி-மாதம்பே வீதியானது சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களை இணைக்கும் ஒரு பிரதான வீதியாகவும், சுற்றுலாத்துறை முக்கியத்துவம் வாய்ந்த வீதியாகவும் இருப்பதை ஏற்றுக்கொள்வாரா;

(ii) மேற்படி வீதியில் மாதம்பே முதல் சூரியகந்த வரையான பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள போதிலும், தெனியாய 51ஆவது சந்தி வரையான பகுதியின் அபிவிருத்தி பணிகள் பூர்த்திசெய்யப்படாமையால் மக்கள் சிரமத்திற்கு உள்ளாகியிருப்பதை அறிவாரா;

(iii) மேற்படி வீதியின் அபிவிருத்தித் திட்டம் இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(iv) குறித்த திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள திகதி யாது;

(v) காலி-மாதம்பே வீதியை, அதன் வரலாற்று முக்கியத்துவம் பாதுகாக்கப்படும் வகையில் 'சுற்றுலா வீதியாக' அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 செப்தெம்பர் 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1066/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வட மாகாணத்தில் தெங்குப் பயிர்ச்செய்கையினைத் தாக்கும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) பாதிக்கப்பட்ட தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு இழப்பீடு/ நிதி உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அதன் பரவலுக்கான காலநிலைக் காரணங்கள் குறித்து சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் நடத்தப்பட்டனவா;

(iv) உயிரியல் கட்டுப்பாட்டு முறையாகிய ஒட்டுண்ணிக் குளவியைப் *(Encarsia guadeloupe)* பெற்றுக்கொண்ட பிராந்தியங்களின் எண்ணிக்கை யாவை;

(v) அத்தகைய தலையீட்டின் செயல்திறன் குறித்து;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அது ஏனைய மாவட்டங்களுக்குப் பரவுவதைத் தடுப்பதற்கு ஒரு தேசிய செயல்திட்டம் உள்ளதா;

(ii) உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் மாற்று சிகிச்சைகள் தொடர்பான விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றனவா;

(iii) தெங்குப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான பூச்சிக் கட்டுப்பாட்டிற்காக, அடுத்த வரவுசெலவுத்திட்டத்தில் அவசரகால நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா;

(iv) புதிய கட்டுப்பாட்டு முறைகளை உருவாக்குவதற்கான ஆராய்ச்சித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றனவா;

(v) இதை ஒரு விவசாய இடராக அறிவித்து, அதனைத் தீர்ப்பதற்கு அமைச்சுகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1193/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின், வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் வழுக்கியாறு, அராலி, வேலணை மற்றும் புங்குடுதீவு ஊடாக குறிகட்டுவான் வரையில் அமைந்துள்ள வீதியானது அப்பிரதேசத்தின் பிரதான போக்குவரத்து வீதி என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த வீதியின் முழுமையான நீளம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி வீதி இறுதியாக புனரமைப்பு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(v) புனமைப்பு நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்தது யாரென்பதையும்;

(vi) மேற்படி வீதியானது நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாதுள்ளமை தொடர்பில் தாக்கம் செலுத்தியுள்ள காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) புனரமைப்பு நடவடிக்கைகள் தாமதமடைவதன் காரணமாக அங்குள்ள மக்கள் முகம்கொடுக்கின்ற அசௌகரியங்கள் யாவை என்பதையும்;

(viii) குறித்த வீதியின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1268/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாறை மாவட்டத்தின், இறக்காமம் பிரதேசச் செயலாளர் பிரிவின், நாவலடி வட்டை பிரதேசத்தில் 1986, 1989, 1991 மற்றும் 1997 ஆம் ஆண்டுகளில், அம்மாவட்டத்தின் மாவட்டச் செயலாளரால் காணிக் கச்சேரியொன்று நடத்தப்பட்டு, காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம், அம்பாறை மாவட்டச் செயலகத்தின் ஊடாக 21 விவசாயிகளுக்கு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டமையை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அம்பாறை மாவட்டச் செயலாளரின் பணிப்புரைக்கமைவாக, இறக்காமம் பிரதேச செயலாளரால், மேற்படி காணிகளில் கமத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாமென கடந்த 30 வருடங்களாக கமத்தொழில் சார்ந்த மற்றும் மேட்டுநிலச் செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்ட 21 விவசாயிகளுக்கு அவ்வப்போது இடையூறுகள் விளைவிக்கப்பட்டமையை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி விவசாயிகளுக்குச் சொந்தமான காணிகளை இனங்கண்டு, அவற்றை மீண்டும் கையளிப்பதற்காக, அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் பிரதேசச் செயலாளர் மற்றும் இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு, அப்பிரதேசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், மேற்படிக் காணிகள் கையளிக்கப்படுவதை தடுக்கும் விதமாக ஆட்கள் சிலர் இடையூறு விளைவித்துள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படிக் காணிகளை உரிய விவசாயிகளுக்கு மீண்டும் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1529/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாண பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள, தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள, மிகையாகவுள்ள மற்றும் வெற்றிடங்கள் நிலவுகின்ற கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கல்வி வலயங்களின் ரீதியாகவும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் ஒதுக்கீடுகளுக்கு அமைய, இரவு நேரக் காவலாளிகள் இல்லாத பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண ரீதியாகவும்;

வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் நாட்டின் பாடசாலைகளில் பதிவாகியுள்ள இலத்திரனியல் உபகரணங்கள் திருடப்பட்ட சம்பவங்கள் குறித்த தகவல்கள் உள்ளனவா;

(ii) பாடசாலைகளில் உள்ள தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் யாவை;

(iii) இந்த உபகரணங்களின் பாதுகாப்பிற்காக இரவு நேரக் காவலாளிகளை நியமிப்பதற்கோ அல்லது மாற்றுப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கோ 2026ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் விசேட நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(iv) 2027ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள டிஜிட்டல் கல்வித் திட்டங்களை போதுமான பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான பராமரிப்பு நடவடிக்கைகளுடன் நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1661/2025

கௌரவ சானக மாதுகொட,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மாதாந்த அரிசித் தேவையானது அரிசி வகைகளின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மாதாந்த அரசியின் தேவையானது நுகர்வுப் பிரிவின் அடிப்படையில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் ஒவ்வொரு பிரிவிற்கும் தேவையான அரிசி வகை மற்றும் அளவு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி வகைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு அரிசி வகையின் வருடாந்த உற்பத்தியின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2025ஆம் ஆண்டில் சிறுபோகத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நெல் வகைகள், அவற்றின் அளவு மற்றும் இதற்காக செலவிடப்பட்ட தொகை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி சபையின் வசமுள்ள நெல் கொள்வனவு நிலையங்களின் எண்ணிக்கை, அவை அமைந்துள்ள பிரதேசங்கள் மற்றும் ஒவ்வொரு நிலையத்தினாலும் 2025ஆம் ஆண்டின் சிறுபோகத்தில் கொள்வனவு செய்யப்பட்டுள்ள நெல்லின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு சொந்தமான இயங்கு நிலையிலுள்ள மற்றும் இயங்காத நிலையிலுள்ள நெற் களஞ்சியங்களின் எண்ணிக்கையும் அவை அமைந்துள்ள இடங்களும் வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1682/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலம் நிர்மாணிக்கப்படும் வரையில் தற்காலிக படகுப் பாதைச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி படகுப் பாதையை கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு என்பதையும்;

(iii) பாலத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பிறகு, சேவையில் ஈடுபடுத்தியுள்ள குறித்த படகுப் பாதை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் செந்தமாகுமா; இன்றேல், ஒப்பந்ததார நிறுவனத்திற்குச் செந்தமாகுமா என்பதையும்;

(iv) மேற்படி படகுப் பாதையை திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பற்ற கடற் போக்குவரத்து நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற பிரதேசங்களில் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1758/2025

கௌரவ எம்.எஸ் அப்துல் வாஸித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.01.01 ஆம் திகதி வரை பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவில் 'உருமய' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உறுதிகளை பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளவர்களின் எண்ணிக்கையும் இவர்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

(ii) அத்திட்டத்தின் கீழ் மேற்படி காலப்பகுதியில் விண்ணப்பித்தவர்களுக்கு 'உருமய' உறுதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையும் இவர்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

(iv) 'உருமய' உறுதிகளுக்கு விண்ணப்பித்த அதிகமானோருக்கு அந்த உறுதிகள் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த நபர்களின் எண்ணிக்கையும் இவர்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

(vi) அந்த நபர்களுக்கு இதுவரையும் குறித்த உறுதிகள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1912/2026

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வாழைப் பயிரிடப்படுகின்ற பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(ii) வாழைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற, விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) காலநிலை மாற்றங்களாலும் வன விலங்குகளாலும் ஏற்படுகின்ற சேதங்கள் காரணமாக வாழை பயிரிடும் விவசாயிகள் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி சேதங்களுக்காக விவசாயிகளுக்கு இழப்பீடு அல்லது காப்புறுதி வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1942/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படுகின்ற இயற்கை வளங்களைப் பயன்படுத்தி நாட்டிற்குத் தேவையான வலுசக்தியை உற்பத்தி செய்வதற்கான ஏதேனும் நீண்டகாலத் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி திட்டத்தின் கீழ் ஒவ்வொரு இயற்கை வளத்தினையும் கொண்டு உற்பத்தி செய்ய எதிர்பார்க்கின்ற மொத்த வலுசக்தியின் சதவீதம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) வலுசக்தி உற்பத்தியில் தன்னிறைவடைவதற்கு எவ்வளவு காலம் செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும்;

(iv) சூரிய வலுசக்தி உற்பத்தித் திட்டத்தின் கீழ் கூரைகளின் மீதும் நிலத்தின் மீதும் சூரிய படலங்களை பொருத்துவதற்கு எதிர்பார்க்கின்ற காலவரையறை யாதென்பதையும்;

(v) நிலத்தின் மீது சூரிய படலங்களை பொருத்தும் கருத்திட்டத்திற்காக செழிப்பான மற்றும் வளமற்ற நிலங்களைப் பயன்படுத்துவதன் காரணமாக இயற்கைச் சூழல் கட்டமைப்பின் மீது ஏதேனும் தாக்கம் ஏற்படுமா என்பதையும்;

(vi) கூரைகள் மீது சூரிய படலங்களை பொருத்தும் கருத்திட்டத்திற்கு முன்னுரிமையளித்து அதனை ஊக்குவிப்பதில் தடைகள் ஏதும் உள்ளதா என்பதையும்;

(vii) ஆமெனில், அந்தத் தடைகள் யாவை என்பதையும்;

(viii) மானிய அடிப்படையில் செயற்படுத்தப்படும் சூரிய வலுசக்தி கருத்திட்டத்திற்கு தற்பொழுது வசதிகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2271/2026

கௌரவ சுனில் ராஜபக்ஷ,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முத்திரைத் தீர்வையை கணக்கிடுவதற்கு மாகாண சபை மட்டத்தில் பொறுப்பான நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படித் தீர்வையை கணக்கிடும்போது, ஒவ்வொரு ஆதனமும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்படுமா என்பதையும்;

(iii) மேற்படித் தீர்வையை கணக்கிடுவதற்காக ஆதனங்களை மதிப்பீடு செய்யும்போது, காணிகளில் அமைந்துள்ள கட்டடங்களும் கருத்திற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) முத்திரைத் தீர்வைக்காக ஆதனங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தகைமையுடைய உத்தியோகத்தர்கள் மாகாண சபை மட்டத்திலான நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ளனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் காணிகளையும், ஆதனங்களையும் மதிப்பீடு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) ஆதன மதிப்பீடு உரிய முறையில் இடம்பெறுவதையும், அதற்கமைய அறவிடப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை மாகாண சபைகளுக்குக் கிடைக்கப் பெறுவதையும் உறுதிப்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2026 செப்தெம்பர் 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2097/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது அமுலிலுள்ள ‘உயர் மட்டத்திலான ஆசிரியர் வாண்மை விருத்திப் பயிற்சி நிலையங்கள்’ யாவை;

(ii) மொனராகலை மாவட்டத்தில், பிபிலை பிரதேச செயலாளர் பிரிவில், ஹெவெல்வெல கிராம அலுவலர் பிரிவில், வெல்லஸ்ஸ தேசிய பாடசாலைக்கு அருகிலுள்ள நிலையம் தற்போது பயன்படுத்தப்படுகின்றதா;

(iii) ஆமெனில், அது எக்கருமங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது;

(iv) மேற்படி நிலையத்தை நிருவகிக்கும் அமைச்சு/நிறுவனங்கள் யாவை;

(v) மேற்படி நிலையத்தை அமைப்பதற்கு செலவிடப்பட்டுள்ள மொத்த பணத் தொகை யாது;

(vi) மேற்படி நிலையத்தினால் நடத்தப்படும் பாடநெறிகள் யாவை;

(vii) கடந்த 02 ஆண்டுகளினுள் மேற்படி நிலையத்தின் மூலம் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(viii) மேற்படி நிறுவனத்தினால் வழங்கப்படும் சேவைகள் பயனுறுதிவாய்ந்த மட்டத்தில் உள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2123/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியின் 'நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு ஒழுங்குவிதிகள்' மற்றும் ‘வாடிக்கையாளர் பட்டயம் சார்ந்த அனுபந்தம்' ஆகியவற்றின் மூலம் மாற்றுத்திறனாளி நபர்களின் நிதிசார் உள்ளீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) சில வங்கிகளினால் கட்புலனற்ற நபர்களுக்கு தனிநபர் கணக்குகளை ஆரம்பித்தல், கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பிணையாளர்களாகச் செயற்படல் ஆகியன நிராகரிக்கப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அப் பணிப்புரைகளை அனைத்து வங்கிகளிலும் நடைமுறை ரீதியாகச் செயற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) இப்பணிப்புரைகளுக்கு முரணான வகையில் பேணப்பட்டு வரும் வங்கிகளின் உள்ளகக் கடன் கொள்கைகளைத் திருத்தியமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சக்கர நாற்காலிகளைப் பயன்படுத்துவோர் மற்றும் உடல் வளர்ச்சி குன்றியோருக்காக அனைத்து வங்கிக் கிளைகளிலும் தரப்படுத்தப்பட்ட சாய்வுப் பாதைகளும் மற்றும் தாழ்வான மட்டத்திலான சேவைக் கருமபீடங்களும் காணப்பட வேண்டுமென்ற போதிலும், பெரும்பாலான வங்கிக் கிளைகளில் மேற்படி வசதிகள் இல்லாதிருப்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி வசதிகளை அனைத்து வங்கிக் கிளைகளிலும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2190/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மேல் மாகாணத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி, நிலையங்களுள் அரச மற்றும் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி, நிலையங்களில் 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள சிறுவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 18 வயதைப் பூர்த்தி செய்த சிறுவர்களை சமூகமயப்படுத்துவதற்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வேலைத்திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அந்த வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(vi) அவ்வாறு சமூகமயப்படுத்தப்பட்ட அச்சிறுவர்கள் தொடர்பாக ஏதேனும் பின்னாய்வு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(vii) ஆமெனின், அப் பின்னாய்வு நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது நடைமுறையில் உள்ள சமூகமயமாக்கல் திட்டத்தின் கீழ் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலிருந்து வெளியேறும் ஆண்பிள்ளைகள், தவறான நடத்தை அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பதிவாகியுள்ளதா என்பதையும்;

(ii) சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலிருந்து வெளியேறும் பெண் பிள்ளைகள் தொடர்பாகப் போதுமான பின்னாய்வு நடவடிக்கை இல்லாததால், அவர்களது குழந்தைகளும் பிற்காலத்தில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு அனுப்பப்படும் ஒரு நிலைமை உள்ளதா என்பதையும்;

(iii) இதுபோன்ற நிலைமைகளை தடுக்கும் பொருட்டு சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாயின், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2196/2026

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரச அலுவலர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பாக நீண்ட காலமாக முரண்பாடுகள் நிலவுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, தற்போதைய அரசாங்கத்தால் அரச அலுவலர்களின் சம்பள மற்றும் ஓய்வூதிய ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதியும், அதன் விடயப்பரப்பும் யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆணைக்குழுவின் அங்கத்தவர்களின் பெயர்களும், அவர்களுடைய முகவரிகளும் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளுக்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2206/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில், குடிநீர்ப் பிரச்சினையை எதிர்கொண்டுள்ள கிராமங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கிராமங்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2237/2026

கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையிலான கடற்பரப்பிற்குரிய ஆழ்கடலில், கடற்கொள்ளையர்களால் மீனவர்களின் மீன் அறுவடை கொள்ளையிடப்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அதன் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அவர்களது குடும்பங்களின் பொருளாதார நிலையும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) இந்நிலைமை தொடர்ந்து நீடிக்குமாயின், பாரம்பரியக் கடற்றொழிலிலிருந்து பெருமளவான மீனவர்கள் விலகும் அபாயம் காணப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) கடற்கொள்ளைச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் அதிவேக இயந்திரப் படகுகளை அடையாளங் காண்பதற்கும், கண்காணிப்பதற்கும் விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ள கடற்கொள்ளையர்களுக்கும், அவர்களுக்கு உதவி புரியும் நபர்களுக்கும் எதிராக எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vi) இது தொடர்பாக இலங்கை கடற்படையுடனும், ஏனைய சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் ஒருங்கிணைந்து, அமைச்சினால் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vii) மேற்படி பிரதேசத்தில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள நிரந்தரத் தீர்வுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2248/2026

கௌரவ டபிள்யூ. எச். எம். தர்மசேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2025.01.01ஆந் திகதி முதல் தற்போது வரை இலங்கையின் வருடாந்த சோள உற்பத்தியின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் சோளம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக செலவிடப்பட்ட நிதி எவ்வளவென்பதையும்;

(iv) சோளப்பயிர்ச் செய்கையை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2274/2026

கௌரவ காஞ்சன வெலிப்பிட்டிய,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சின் ஊடாக அங்குணுகொலபெலஸ்ஸ பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திற்குள் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி திட்டத்திற்காகச் செலவிடப்பட்ட மொத்த நிதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி திட்டத்தை ஆரம்பிப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் யாவையென்பதையும்;

(iv) இதுவரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நன்மைகள் மற்றும் அந்நன்மைகளைப் பெற்றுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2279/2026

கௌரவ (கலாநிதி) வீ. எஸ். இராதாகிருஷ்ணன்— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடபுஸ்ஸல்லாவ பிரதேசத்தின் பிரதான வைத்தியசாலையொன்றான டெல்மார் பிரதேச வைத்தியசாலையில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில், ஏதேனும் திடீர் விபத்தொன்றின்போது சிகிச்சையளிப்பதற்கோ அல்லது வேறு விசேட சேவைகளை வழங்குவதற்கோ போதுமான முதலுதவி வசதிகள் இல்லாததால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் நோயாளர்கள் நுவரெலியா அல்லது கண்டி வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டி வசதியும் இல்லையென்பதையும்;

(iv) மேற்படி நிலைமை காரணமாக நோயாளிகள் சொந்தச் செலவில் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி வைத்தியசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(v) மேற்படி வைத்தியசாலையைச் சூழவுள்ள பிரதேசங்களில் பெருமளவான பின்தங்கிய கிராமங்கள் காணப்படுவதுடன், பெருந்தோட்ட மக்களும் வசித்து வருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சிரமங்களைப் போக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2293/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தின், நேகம்பஹ பிரதேச வைத்தியசாலை, C தரத்தைச் சார்ந்த பிரதேச வைத்தியசாலையாகும் என்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆளணியின் பிரகாரம், வைத்திய உத்தியோகத்தர்கள் மூவர் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டுமென்பதையும்;

(iii) தற்போது குறித்த வைத்தியசாலையில் வைத்திய உத்தியோகத்தர் ஒருவர் மாத்திரமே சேவையாற்றுவதன் காரணமாக சுகாதாரச் சேவைகளை வழங்குவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் நிலவும் வைத்திய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை நிவர்த்திச் செய்து, தேவையான வைத்திய உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான உத்தேசக் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2026 செப்தெம்பர் 25, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

31/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் இலங்கையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சந்தர்ப்பங்களின் போது வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் அரிசியை இறக்குமதி செய்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சதொச நிறுவனத்தினூடாக வேறு நபர்களுக்கும் வியாபாரிகளுக்கும் சட்டத்திற்கு முரணான வகையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

142/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உழைக்கும்போதே செலுத்தும் வரி (PAYE Tax) அறிமுகப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வரி நடைமுறைப்படுத்தப்படும் முறை யாதென்பதையும்;

(iii) மேற்படி வரியின் மூலம் 2022ஆம் ஆண்டு தொடக்கம் 2025ஆம் ஆண்டு வரை, அரசாங்கம் பெற்றுக்கொண்ட வருமானம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) மேற்படி வரியின் காரணமாக இந்நாட்டிலுள்ள தொழில்வல்லுநர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) மேற்படி வரியைத் திருத்துவதற்காக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

686/2025

கௌரவ ரோஹண பண்டார,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவைப் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தற்போது மேற்படி நோயாளிகளுக்கு கிடைக்கும் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காக தற்போது காத்திருப்போர் பட்டியலில் இருப்பவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி நபர்களுக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1807/2026

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மட்டக்களப்பு மாவட்டத்தில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் —

(i) வனங்களாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள;

(ii) வன ஒதுக்கங்களாகப் பிரகடனப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள;

(iii) வன ஒதுக்கங்களாகப் பிரகடனப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டு பிரதேச செயலாளர் அலுவலகங்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள;

(iv) பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு விடுவிப்பதற்கு உத்தேசித்துள்ள;

(v) இதுவரையில் பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள;

காணிகளின் அளவு, அவை அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள், கிராம அலுவலர் பிரிவுகள் மற்றும் கிராமங்கள் என்பன யாவையென்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வீரானைக்கல் விவசாய அமைப்பிற்குச் சொந்தமான சுமார் 560 ஏக்கர் காணியை, OMG/PR/02-POLYGON என்ற இலக்கத்தின் கீழ் வன ஒதுக்கமாகப் பிரகடனப்படுத்துவதற்கு வனப் பாதுகாப்புத் திணைக்களம் முன்மொழிந்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி காணி 1979ஆம் ஆண்டு முதல் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்பட்டு, 1983ஆம் ஆண்டு முதல் அதற்கு வருடாந்த காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், 2008/04ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, மேற்படி காணியை விவசாயிகளுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2107/2026

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உடவளவை தேசிய பூங்காவிற்கும் லுணுகம்வெஹெர தேசிய பூங்காவிற்கும் இடையில் உள்ள யானை வழித்தடம், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி வழித்தடத்தின் இருமருங்கிலும் பாதுகாப்பு மின்சார வேலி அமைக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி மின்சார வேலியை அமைப்பதன் முக்கிய நோக்கம் யாது;

(iv) யானை பாதுகாப்பு வேலியை அமைப்பதற்குச் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு;

(v) 2018 ஆம் ஆண்டில் யானை பாதுகாப்பு வேலி இருக்கும் போதே அதிகாலை வேளையில் கிராமத்துக்குள் புகுந்த ஒரு யானை பாடசாலை மாணவரொருவரைக் கொன்றுள்ளதை அறிவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யானை வழித்தடத்தின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலியில் பலஹருவ கிராமம் உள்ளடங்கும் பகுதியில் பிரதான மின்சார வேலி தற்போது செயலிழந்துள்ளதென்பதை அறிவாரா?

(ii) மேற்படி மின்சார வேலியை அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்த முடிவு எடுக்கப்பட்ட திகதி மற்றும் அதன் நோக்கம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2135/2026

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பண்டாரகம, மில்லெனிய மற்றும் ஹொரனை பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குரிய காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளுள் தற்போது வரை வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) காணிபெறுநர்களின் பெயர்ப் பட்டியலொன்றை வழங்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவுக்குரிய காணிகளுள் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்டு வரும் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி ஒவ்வொரு பிரதேசச் செயலகப் பிரிவிலும்;

(i) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்குரிய காணிகளின் அளவு மற்றும் அதற்காக வருடாந்தம் அறவிடப்படும் குத்தகைக் கட்டணம்;

(ii) குத்தகை ஒப்பந்தம் காணப்படுகின்றபோதும் குத்தகைக் கட்டணம் அறவிடப்படாத காணிகளின் அளவு;

(iii) குத்தகைக்கு வழங்கக் கூடிய பிணக்கற்ற காணிகளின் அளவு;

வெவ்வேறாக யாதென்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2137/2026

கௌரவ நிஷாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவால் காலி மாவட்டத்தில் வழங்கப்பட்ட காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவென்பதையும்;

(ii) பிரதேச செயலகப் பிரிவு வாரியாக, மேற்படி காணிகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) காணிகளை வழங்கும்போது பின்பற்றிய நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிபந்தனைகளை மீறிய காணி பெறுநர்கள் தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2270/2026

கௌரவ ருவன் மாபலகம,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அரச வீடமைப்புத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வீடமைப்புத் திட்டமும் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு, மக்களிடம் கையளிக்கப்பட்ட ஆண்டு, வீடமைப்புத் திட்டத்தின் நிலப்பரப்பு மற்றும் தற்போதுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நிட்டம்புவ, ரன் பொகுணுகம வீடமைப்புத் தொகுதிக்குள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள ‘ரனிந்துகம’ மற்றும் குரு ‘கம்மானய’ வீடமைப்புத் திட்டங்களுக்காகப் பயனாளிகளைத் தெரிவுசெய்கையில் பயன்படுத்தப்பட்ட அளவுகோல்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி இரண்டு வீடமைப்புத் திட்டங்களிலும் அமைந்துள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி திட்டங்களின் கீழ் ஒரு வீட்டு அலகிற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள உதவித் தொகை/கடன் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அப்பயனாளிகள் வசிக்கும் காணிகளின் உரிமையை அவர்களுக்குக் கையளிப்பதற்காகச் செலுத்தப்பட வேண்டிய தொகையைத் தீர்மானிக்கும் முறைமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2277/2026

கௌரவ சமிந்த லலித் குமார,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூகப் பாதுகாப்புச் சபையை நிறுவுவதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படிச் சபையால் நடைமுறைப்படுத்தப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஓய்வூதியத் திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு ஓய்வூதியத் திட்டத்திற்கும் இதுவரை பங்களிப்புச் செய்துள்ள நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவ்வாறு பங்களிப்புச் செய்த நபர்களுள், தற்போது ஓய்வூதியம் பெறுகின்ற நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2285/2026

கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் —

(i) போதுமான தீயணைப்பு சேவை வசதிகள் இல்லை என்பதை அவர் அறிவாரா;

(ii) தற்பொழுது செயற்பாட்டில் உள்ள தீயணைப்பு நிலையங்கள் மற்றும் தீயணைப்பு வாகனங்களின் எண்ணிக்கை யாது;

(iii) தீ விபத்துகளின் போது உடனடி உதவி வழங்குவதற்கு எடுக்கும் சராசரி நேரம் எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அந்த மாவட்டங்களில் —

(i) தீயணைப்பு சேவைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையும், நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையும் யாது;

(ii) கடந்த 03 ஆண்டுகளில் தீயணைப்பு சேவை மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மற்றும் செலவிடப்பட்டுள்ள நிதித் தொகை வெவ்வேறாக யாது;

(iii) தீயணைப்பு வீரர்களுக்கு நவீன பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் விசேட மீட்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி மாவட்டங்களில் —

(i) சகல வசதிகளையும் கொண்ட நவீன தீயணைப்பு நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுப்பாரா;

(ii) புதிய தீயணைப்பு வாகனங்கள் மற்றும் நீர் தாங்கிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாது;

(iii) தீயணைப்பு சேவை மேம்பாட்டிற்கான துரிதத் திட்டங்கள் இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?